ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1790/14 - 2012 දෙසැම්බර් මස 26 වැනි බදාදා - 2012.12.26

*1790/14 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம்*

*22 அ பிரிவின்படியான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 22 அ பிரிவின்படி எனக்கு வழங்கப்பட்டுள்ள தற்றுணிபு அதிகாரங்களின்படி, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இத்தால் உள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள இடப்பரப்பினை இச்சட்டத்தின் தேவைக்காக உரிமம்பெற்ற வலயம் ஒன்றாகப் பிரகடனப்படுத்துகிறேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு,*
*2012, திசெம்பர் 24.*

**அட்டவணை**

*தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவின் வெலிவெவ, மீகஹஜபுர மற்றும் இஹலகும்புக்வெவ கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அமைந்துள்ளதும் மற்றும் ஊவா மாகாணம், மொனராகல மாவட்டம், செவனகல பிரதேச செயலாளர் பிரிவினுள் அமைந்துள்ள நுகேகலயாய கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ளதும் அம்பாந்தோட்டை மாவட்ட நிலஅளவை அத்தியட்சகர் கே. டபிள்யூ. ஏ. விஜேவர்த்தனவினால் 2012, ஒற்றோபர் 11 ஆந் திகதி வரையப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட படியெடுப்பு இலக்கம் H/SG/SRY/2012/434 இல் குறித்துரைக்கப்பட்டதும் பின்வருமாறு எல்லைகளைக் கொண்டதுமான, எண்ணூற்றி நாற்பத்தியொன்பது தசம் ஆறு ஒன்பது ஒன்று ஏழு ஹெக்டேயார் (849.6917 ஹெக்டேயார்) நிலப்பரப்பைக் கொண்டதுமான சகல காணித்துண்டுகளும் :-*

*வடக்கு : மய்லகஹவத்த தாழ்ந்த காடு மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை) ;*
*கிழக்கு : வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை), நீர்ப்பாசனக் கால்வாய் மற்றும் வீதி ;*
*தெற்கு : நீர்ப்பாசனக் கால்வாய் வீதி தற்போதுள்ள வேலி (யானைத் தடுப்பு வேலி மற்றும் புதிதாக அமைக்கப்பட்ட) வீதி, அத்துடன்*
*மேற்கு : (புதிதாக அமைக்கப்பட்ட) வீதி, மய்லகஹவத்த தாழ்ந்த காடு மற்றும் வீதி (வீதி அபிவிருத்தி அதிகார சபை).*

*1- 374*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.